# மாத்தளை பிரதேச சபை
# மாத்தளை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 25 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஆகஸ்ட் 16 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது அறிக்கையில் காணப்படும் கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மாத்தளை பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டிற்காக பற்றுச்சீட்டிடப்பட்ட நீர்க்கட்டண வருமானம் ரூபா 6,597,889 ஆக இருந்த போதிலும் அது ரூபா 8,295,732 ஆகக் கணக்கு வைக்கப்பட்டமையினால் நீர் விற்பனை வருமானம் மற்றும் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவையாக இருந்த நீர்க்கட்டணம் ரூபா 1,697,843 தொகை அதிகரித்து கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுகளுக்குரிய மீளாய்வாண்டின் போது கிடைத்த முத்திரைக் கட்டண வருமானமான ரூபா 407,150 தொகை மீளாய்வாண்டின் வருமானமாகக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(இ) வாடகைக்கு வழங்குவதற்காக நிர்மாணிக்கப்படுகின்ற கட்டிடத்திற்காக வாடகைக்குப் பெற்ற தரப்பினரிடமிருந்து மீளாய்வாண்டில் ஒரே தடவையில் அறவிடப்படவேண்டிய ரூபா 220,000 தொகை மற்றும் நில வாடகை ரூபா 2,900

## 2.2 நிதிக்கட்டுப்பாடு

2005 தொடக்கம் 2008 ஆம் ஆண்டுவரை 05 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 310,367 தொகையான முற்பணம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 1,275 | 1,065 | 593 |
| (ii) | வாடகை | 4,115 | 2,163 | 18 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,650 | 2,310 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 28,071 | 134,071 | 14,597 |

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 132 ஆம் பிரிவில் நிதியேற்பாடுகள் ஒதுக்கீடு செய்யப்படாத விழாக்கள், வாழ்த்துக்கள் மற்றும் பெனர் கட்டுதல் போன்ற செயற்பாடுகளுக்காக மீளாய்வாண்டில் 05 சந்தர்ப்பங்களின் போது ரூபா 150,840 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 2.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுச் செயலாளரின் 2000 நவம்பர் 30 ஆந் திகதிய 7/1/2000 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக அலுவலகச் செயற்பாடுகள் மற்றும் மேற்பார்வை கடமை நடவடிக்கைகளுக்காக சபையின் முன்னாள் செயலாளருக்கு விடுமுறைதினம் சேவையாற்றுதலுக்காக ரூபா 31,690 தொகையான விடுமுறைதினக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) விடுமுறை தினங்களில் சேவையில் ஈடுபடுத்துவதற்கு முன்னர் தலைவரினது அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான முறையான அங்கீகாரமின்றி மீளாய்வாண்டில் 03 சந்தர்ப்பங்களின் போது ரூபா 13,113 தொகையான விடுமுறை தினச் சம்பளம் செலுத்தப்பட்டிருந்தன. அவ்வாறு உரிய சேவை நிறைவேற்றப்பட்டதன் பின்னர் செய்யப்பட்ட கடமைகள் தொடர்பான விபரம் கொடுப்பனவு உறுதிச்சீட்டில் உள்ளடக்கப்பட்டு அது கவனத்தில் கொள்ளப்பட்டதன் பின்னர் கொடுப்பனவு சிபார்சு செய்யமுடியுமாக இருந்த போதிலும் மேற்கொள்ளப்பட்ட கடமைகள் தொடர்பான எழுத்து மூல உறுதிப்படுத்தலின்றி 08 சந்தர்ப்பங்களின் போது ரூபா 31,690 தொகையான விடுமுறைதினச் சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 19(1)(1) ஆம் பிரிவின் பிரகாரம் பதவியொன்றைத் தோற்றுவித்தல் மற்றும் சம்பளத்தைத் தீர்மானித்தல் தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளரின் எழுத்து மூல முன் அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான அங்கீகாரமின்றி 39 ஊழியர்கள் நாட்சம்பள அடிப்படையில் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 5,676,309 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

1,370 பெறுமதியான 02 இருப்பு அலகுகளின் பற்றாக்குறை அவதானிக்கப்பட்டதுடன் இருப்புப் பதிவேடு எந்த உத்தியோகத்தரினதும் மேற்பார்வைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) ஒப்பந்த நிருவாகம்

(உ) வாகனக் கட்டுப்பாடு